# தெனாலி இராமன் - தமிழ்ச் சிறுநாடகம்
## சித்திரை சிறப்பு விழா (ஸர்வதாரி ஆண்டு)
சனிக்கிழமை, சித்திரை 14, 2008
தலஹாசி, புலோரிடா 32317, அ. ஐ. நா.

# Tenali Raman - Tamil Drama
## Chithirai Special Function (Sarvathari Year)
Saturday, April 26, 2008
Tallahassee, FL 32317, USA

நாடகத் தயாரிப்பு:
- நாடகம் எழுதியவர்: திரு சீதாமணி
- நாடகம் தழுவியவர்: திரு தாயுமானசாமி சோமசுந்தரம்
- இணைய தள முகவரி: http://somabhanu.googlepages.com
- மின் தகவல் முகவரி: somabhanu@gmail.com
- நாடகப் பயிர்ச்சி: திரு தாயுமானசாமி சோமசுந்தரம்
- நாடகப் பயிர்ச்சி உதவி: திருமதி ஞானபானு சோமசுந்தரம்

நடிப்பவர்கள்:
- தெனாலி இராமன்: வி. தா. சோ.
- நண்பர்: அ. ஹ.
- மந்திரி: அ. ஐ.
- ராஜா: அ. ஹ.
- மந்திர வாதி / வித்தை காரன்: இரா. வா.
- பயில் வான்: இரா. வா.
- சிப்பாய் 1 (காவல் ஆளி 1): ரோ. வா.
- சிப்பாய் 2 (காவல் ஆளி 1): மா. ம.

Thay Somasundaram | somabhanu@gmail.com

## காட்சி -1

நேரம்: காலை
நடிப்பவர்கள்: தெனாலி இராமன் மற்றும் நண்பர்
இடம்: தெனாலி இராமன் வீடு

(தெனாலி இராமன் கவலையோடு உட்கார்ந்து இருக்கின்றார். நண்பர் அவரை பார்த்து கேட்க்கிறார்)

நண்பர்: தெனாலி இராமன், ஏன் கவலையாக இருக்கிறாய்?

தெனாலி இராமன்: அது சொல்லுவது கஷ்டம். ஆனால் என் கஷ்டத்துக்கு வழி தெரியும்.

நண்பர்: அப்படியா! அது என்ன வழி?

தெனாலி இராமன்: எனக்கு ஒரு வேலை தேவை. இந்த ஊரை விட்டுவிட்டு விஜய நகர் போகலாம். அங்க போய் ராஜா கிருஷ்ண தேவராயரை பார்க்கலாம். அவர் நல்லவர். எனக்கு வேலை தருவார்.